**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1218/2024 நாள்- 03.11.2025

**வா.சா.1-மகாலட்சுமி**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

இந்த வழக்கை துரைராஜ் என்பவரின் சொததில் பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் ½ பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் அம்மாவின் பெயர் கணபதியம்மாள். நான் துரைராஜ்க்கும் கணபதியம்மாளுக்கும் பிறந்த பெண் வாரிசு என்பததின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அம்மா கணபதியம்மாள் உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். என் அம்மா இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். என் அம்மா உயிருடன் இருக்கிறா இல்லையா என்று வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால்சரிதான். என் அம்மா கணபதியம்மாள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும் , அவரை சேர்க்காததால் இந்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் துரைராஜ் கணபதியம்மாள் தம்பதியருக்கு பிறந்த மகள் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் துரைராஜ்ன் வாரிசு என்று வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று இராஜபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவஎண்.190/2021 வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால்சரிதான். நான் அவஎண்.190/2021 வழக்கில் என் அம்மா கணபதியம்மாள் இறந்து விட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தட்டச்சுபிழை ஏற்பட்டுள்ளது. துரைராஜ் என் அம்மாவை 1979 ல் திருமணம் செய்தார் என்றால் சரிதான். திருமணம் ஆன 3 வருடத்தில் எங்கள் சமூக வழக்கத்தின் படி விவாகரத்து பெற்றுபிரிந்து சென்றுவிட்டார்கள் என்றால் முறைப்படி விவாகரத்து பெறவில்லை. இருவரும் பிரிந்த

சமயதத்தில் எனக்கு 2 வயது என்றால் சரிதான். என் அம்மா மருதுபாண்டி என்பவருடன் பேசி பழகிய காரணத்தினால் என் பெற்றோர்கள் பிரிந்தார்கள் என்றால் சரியல்ல. என் அம்மாவும் அப்பாவும் பிரிந்த பிறகு நான் என் அம்மாவுடன் தான் இருந்து வருகிறேன் என்றால் என் அப்பாவின் வீட்டிற்கும் சென்று வருவேன். அவஎண்.190/2021 வழக்கில் என் அம்மா என் அப்பாவிடம் இருந்து பிரிந்த பிறகு நான் என் அம்மாவுடன் தான் இருந்து வருகிறேன் என்று சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. நான் என் அம்மாவுடன் தான் இருநது வருகிறேன் என்று சாட்சியம் அளித்து விட்டு தற்போது என் சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. என் அம்மாவும் துரைரா'ஜம் பிரிந்த பின்ஹ என் அப்பா மாரியம்மாளை 1982 ம் ஆண்டு திருமணம் செய்தார் என்றால் சரிதான் மாரியம்மாளுக்கும், துரைராஜ்க்கும் பிறந்த பிள்ளைகள் தான் 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் அம்மா துரைராஜ் விட்டு பிரிந்த பின்பு எனக்கும் என் அம்மாவிற்கும் வாழ்நாள் ஜீவனாம்சம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. துரைராஜ் என் அம்மாவிற்கு வாழ்நாள் ஜீவனாம்சம் கொடுத்த காரணத்தினால் தான் என் அப்பா இரண்டாவது திருமணம் செய்ய சம்மதித்தார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி 10 வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டில் குடியிருந்து வருகிறார் என்றால்சரிதான். ஆனால் 2 ம் பிரதிவாதி இராஜபாளையத்தில் குடியிருந்து வருவதாக தவறாக இந்த வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மா 1995 ல் மருதுபாண்டியை திருமணம் செய்தார் என்றால் சரிதான். அந்த திருமணத்தின் பயனாக என் அம்மாவிற்கு ஒரு ஆண், பெண் குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். என் அம்மா பிரிந்த வருடமான 1982 வரை என் அப்பா என் அம்மாவை பராமரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு என் அப்பா பராமரிப்பு செலவு கொடுத்தார். என் அம்மா மருதுபாண்டியை திருமணம் செய்து கணபதிசுந்தரநாச்சியார்புரத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எ ன் அம்மா மருதுபாண்டியை திருமணம் செய்த

பின்பு என் அப்பாவின் அம்மாவின் வீட்டில் சுமார் 6 மாதம் இருந்தேன். என் அம்மாவின் தம்பி பன்னீர்செல்வத்திற்கு என் அப்பா துரைராஜ் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. பன்னீர்செல்வத்திற்கு என் அப்பா துரைராஜ் திருமண்ம செய்து வைத்தார்என்றும், நான் 3 மாதத்திலேயே பன்னீர்செல்வத்தை பிடிக்கவில்லை என்று அவரிடம் இருந்து பிரிந்து என் அம்மாவின் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. என் அப்பா துரைராஜ் 16.11.2016 அன்று இறந்தார். என் அப்பாவின் அப்பாவின் பெயர் வெள்ளைச்சாமி அவர் 1997 ல்இறந்துவிட்டார். என் தாத்தா இறந்த பிறகு என் தாத்தாவின் சொத்தை 1997 ல் என் அப்பாவும் அவரின் சகோதரர்களும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் நாளது தேதி வரை பாகம் பிரிக்கவில்லை. என் அப்பா உயிருடன் இருக்கும் போது என் தாத்தாவின் சொத்தில் பங்கு இருப்பதாக என் அப்பாவிற்கு 21.04.2003 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பில் நான் என் அப்பா பன்னீர்செல்வத்திற்கு திருமணம் செய்து வைத்து விட்டதாகவும் 3 மாதத்தில் நான் பிடிக்காமல் பிரிந்து சென்று ஊர் பஞ்சாயத்தில் விவாகரத்து பெற்றுவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அப்போது நான் மைனர். 1997 ல் நான் மதுரையை சேர்ந்த கண்ணன் என்பவரை நான் 2 வது திருமணம் செய்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்சரிதான். நான் பன்னீர்செல்வத்தை விட்டு பிரிந்ததது என் அப்பாவிற்கு பிடிக்கவில்லை என்பதால் என்னிடம் பேசுவதை நிறுத்தி விட்டார் என்றால் சரிதான். பன்னீர்செல்வத்தை விட்டு பிரிந்ததால் ஊர் பஞ்சாயத்தில் எனக்கும், என் அப்பாவிற்கும் எந்த உறவும் கிடையாது என்று எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்பு எனக்கும் மாரியம்மாள் குடும்பத்திற்கும் பாகம் கேட்டது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வந்தது என்றால் இல்லை. பிரச்சனை ஏற்பட்டது என்றும், 05.01.2013 ல் என் அப்பாவிற்கு

பாத்தியப்படட சொத்துக்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் எழுதி வைத்து விட்டார் என்றும், என் அப்பா இறப்பிற்கு பிறகு உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்த 1ம் பிரதிவாதி பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. துரைராஜ் இறக்கும் வரை இரண்டாம் மனைவி மாரியம்மாளுடன் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். துரைராஜ் குடும்ப அட்டையில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். துரைராஜ் என்னை சட்டபடியான வாரிசு என்று எந்த ஆவணத்தில் என்னை நாமினியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் துரைராஜ்க்கு சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால் தான் எந்த ஒரு அரசு ஆவணத்தில் என்னை நாமினியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ.1 அறிவிப்பில் ஒரு வாராத்திற்குள் பாகம் பிரித்து கொடுக்கவில்லை எனில் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்பியவுடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்பிய குறிப்பிட்ட காலவரம்பிற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு காலவரம்பால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான்7 சொத்தை காட்டியுள்ளேன். இந்த வழக்கில் காட்டியுள்ள சொத்தில் வீடு, புஞ்சை நிலம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் காட்டியுள்ளள சொத்துக்களில் பூர்விக சொத்து எந்த சொத்து என்றும், என் அப்பாகிரையம் வாங்கிய சொத்து எந்த சொத்து என்று என்னால் கூறமுடியாது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களின் சர்வே எண், நான்குமால்கள், விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் அந்த சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றும், அதனால் தான் ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளுக்கு 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா மற்றும் தீர்வை வரி விதிக்கப்பட்டு வருகிறது என்றால் 2025ம் ஆண்டு 6வது மாதத்தில் இருந்து தான் மாறியுள்ளது. நான்

சொல்வது பொய் என்றும், என் அப்பாவின் இறப்பிற்கு பிறகு 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு வரி விதிக்கப்ட்டு வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான வா.சா.ஆ 2,3,7 ஆகியவை என் அப்பா இறப்பதற்கு முன்பாக உள்ளஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கை தாக்கல் செய் த போது தாவா சொத்துக்களுக்கான பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரல் இருந்தது என்றும், அதை மறைப்பதற்காக என் அப்பாஉயிருடன் இருந்த போது பெற்ற பட்டாக்களை வைத்து இந்த வழககை தரக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. துரைராஜ் எனக்கு தேவையான நகை மற்றும் பணம் கொடுத்ரதுவிட்டதால் தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது எனற்ால் சரியல்ல. துரைராஜ் தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் எழுதிக் கொடுத்து என் அப்பாவின் இறப்பிற்கு பிறகு உயில் ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதி தான் பட்டா பெற்று அனுபவம் செய்து வருவதால் தாவா சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றும், கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 06.11.2019 அன்று நான் பிரதிவாதிகளிடம் எங்கு வைத்து பங்கு கேட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் குடியிருந்து வந்ததால் இந்த வழக்கில் வழக்குமூலம் ஏற்படவில்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.